
714

# தமிழ் படி

(இரண்டாம் இதழ்)



# தமிழ் படி

(இரண்டாம் இதழ்)

★

ஆசிரியர் :

முதியோர் கல்வி - கோபால்

தென்னிந்திய

முதியோர் கல்வி கூட்டுறவு கழகப்

பதிப்பகம், லிமிடெட்,

10, நரசிங்கபுரம் தெருவு, சென்னை-2.

டெலிபோன் : 85397

விலை அணு மூன்று

# தமிழ் படி

(இரண்டாம் இதழ்)

★

ஆசிரியர் :

முதியோர் கல்வி - கோபால்

தென்னிந்திய

முதியோர் கல்வி கூட்டுறவு கழகப்

பதிப்பகம், லிமிடெட்,

10, நரசிங்கபுரம் தெருவு, சென்னை-2.

டெலிபோன் : 85397

விலை அணா மூன்று

முதல் பதிப்பு —மார்ச் 1949
இரண்டாம் பதிப்பு—மார்ச் 1950
மூன்றும் பதிப்பு—மே 1951
நான்காம் பதிப்பு—டிசம்பர் 1952
ஐந்தாம் பதிப்பு—ஜூலை 1954
ஆறும் பதிப்பு—ஏப்ரல் 1955

# முன்னுரை

இந்த அரிய நூல் உருவத்தில் சிறியதானுலும் உள்ளத்தில் பெரியது. சுதந்திர இந்தியாவில்தான் இத்தகைய நூல்கள் பிறக்கும். இத்தகைய நூல்கள்தான் இந்தியாவின் சுதந்திரத்தை என்றென்றும் பாதுகாக்கும். சுதந்திரம் பெற்று ஜனநாயக அரசியல் முறையாக வாழ விரும்பும் நாட்டில் மக்கள் அறிவாளிகளாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சுதந்திரம் நிலைக்காது; நிலைத்தாலும் பயன் படாது; பயன் பட்டாலும் உலகம் போற்றும் முறையில் ஏற்படாது. அறிவு நாடெங்கும் பரவவேண்டுமானுல் இளைஞர் கல்விமட்டும் போதாது; முதியோர் கல்வியும் இன்றியமையாததாகும். இனிமேல் வாக்குரிமை 21 வயதுள்ள ஆண்மக்கள், பெண்மக்கள் யாவருக்கும் உண்டு. அவர்களுக்கு மிக்க அவசியமான அறிவைப் புகட்டுவதே இந்நூலின் நோக்கம். முதியோர் கல்வித்துறையில் வெகு ஆண்டுகளாக அரும்பாடுபட்டு வருகின்ற இந்நூலாசிரியர் திரு டி. ஜே. ஆர். கோபால் அவர்களுடைய முயற்சி வெற்றியடைய பொதுஜனங்களை ஆதரிக்கும்படி நான் வேண்டுகின்றேன்.

K. S. ராமஸ்வாமி சாஸ்திரி.

# நம் நோக்கம்

'தமிழ் படி' முதல் புத்தகத்தைப் படித்து விட்டோம். தமிழிலுள்ள எல்லா எழுத்துக்களும் நமக்கு இப் பொழுது தெரியும். நமக்குத் தெரிந்த எல்லா எழுத்துக்களையும் தெரியாத வர்களை அன்புடன் அழைத்து சொல்லிக் கொடுக்கவேண்டும்.

தமிழிலுள்ள எல்லா எழுத்துக் களையும் கற்றுல் சுலபமாக சிறு புத்தகங்களைத் தாஞகவே படிக்க லாம். நமக்கு வந்த கடிதத்தை ஒருவர் உதவியும் இல்லாமல் நாமே படிக்கவும், அதற்கு பதில் எழுதவும் முடியும். இன்னும் ஏதாவது பத்திரம் எழுதுவதற்கும், தினச்செய்தித் தாள் களைப் படித்து உலகத்திலும், நம் நாட்டிலும், ஊரிலும் நடக்கும் செய்தி களைத் தெரிந்துகொள்ளவும் முடியும். நாம் எல்லோரும் படிக்க எழுதத்

தெரிந்தவர்களானல் நம்மால் நம் ஊரும், நம் நாடும் நன்மையும் பெருமையும் அடையும்.

இது மாதிரியான படிப்புக்கு நம்முடைய வீட்டுத் திண்ணைகளையும், தாழ்வாரங்களையும் படிக்கும் இடங்களாக உபயோகிக்கலாம். நம்முடைய ஒழிவு நேரங்களில் தினமும் சிறிது நேரம் படிக்க ஆரம்பித்தால் போதும். ஆண், பெண் எல்லோரும் சுலபமாக கற்கலாம். படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் தான் படித்ததை ஒருவருக்காவது கற்றுக் கொடுக்க வேண்டும். தர்மங்களில் சிறந்தது கல்வி தானம்தான். பொன், மண் முதலியவைகளையும் தானம் செய்யலாம். ஆனல் அவைகள் கொடுத்தவரிடம் நிலைத்து நிற்கா. பொன் திருடரால் களவாடப்படலாம். மண்ணுகிய பூமியை விற்றுவிடலாம்.

விற்ற பணமும் நம்மிடமில்லாமல் வீணாகச் செலவாகிவிடும். அதனால் நாம் விரும்பிய பலன் கிடைப்பதில்லை. கல்வியோ ஒருவருக்கு அளிக்கப்பட்டால் அவர் உடல் அழியும் வரையில் நிலைத்து நின்று நமக்கும், நம் ஊருக்கும், நம் நாட்டுக்கும், எல்லோருக்கும் பலன் அளிக்கிறது.

நமது பெரியோர்கள் கம்பர், ஏசுநாதர், மகமதுநபி, திருவள்ளுவர், இராமலிங்கர், விவேகானந்தர், புத்தர், மகாத்மா காந்தியடிகள் ஆகிய ஒவ்வொருவரும் நமக்கும், நம் நாட்டுக்கும் பல துறைகளில் தொண்டு செய்திருக்கிறார்கள். இவர்களால் செய்யப்பட்ட தொண்டு மனித உலகத்துக்கு ஒரு பெரிய தர்மமாகும். நம் முன்னேற்றத்திற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் உழைத்து இருக்கிறார்கள். இவர்களது உழைப்பு

என்றும் அழியாத உழைப்பு. நம் முடைய ஓய்வு நேரங்களில் இவர் களால் செய்யப்பட்ட சேவைகளுள்ள புத்தகங்களைப் படிக்க வேண்டும். நாமும் இவர்கள் காட்டிய வழியி லேயே உழைக்க முயலவேண்டும்.

நம் உழைப்பு முதலில் நமக்கும் நம் வீட்டுக்கும், பிறகு நம் சமூகத் துக்கும் அதற்குப் பிறகு நம் நாட் டுக்கும் படிப்படியாக இருக்க வேண் டும். அந்த உழைப்பு உண்மை யானதாகவும், நம்மைச் சேர்ந்தவர் களுக்குப் பலன் தருவதாகவும் இருக்க வேண்டும். நம்முடன் சேர்ந்து உழைக்கும் நண்பர்கள் யாரையும் பகைத்துக் கொள்ளாமல் ஒற்றுமை யாக இருக்கவேண்டும். விரோதியா னாலும் விரும்பவேண்டும். அதுவே உண்மை உழைப்பாளியின் நல்ல நடத்தைக்கு அறிகுறியாகும்.

## சுத்தம்

வீடு: நாம் இருக்குமிடத்தை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நாமிருக்கும் வீட்டையும், வாசலையும், பின்புறத்தையும் நாள்தோறும் சுத்தம் செய்யவேண்டும். குப்பையையும், குழந்தைகளின் மலத்தையும் கண்ட இடத்தில் போடக்கூடாது. அப்படிச் செய்வதால் காற்று கெட்டுவிடுகிறது. அந்த அசுத்தக் காற்றை நாம் உட்கொண்டால் பல வியாதிகள் உண்டாகும். இவைகளைக் குறிப்பிட்ட இடத்தில் குழி தோண்டியோ அல்லது தொட்டியிலோ போட்டு வைத்தால் நல்ல உரமாகும். அவைகளை நம் பயிர்களுக்கு எருவாகப் போட்டால் நல்ல விளைச்சல் உண்டாகும். வீட்டிலுள்ள அசுத்தத்தைத் தெருவில் போடுவதால் நமக்கும் மற்றவர்களுக்கும் பலவிதமான வியாதிகளை நாமே வரவழைத்துக்கொள்கிறோம்.

* * *

ஆடை: நம் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதுபோல் நம்முடைய ஆடைகளையும், படுக்கைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நாம் உடுத்தும் உடைகள் கந்தையானாலும் தினந்தோறும் துவைத்துக் கட்ட வேண்டும் அவசியமானால் வாரத்துக்கு ஒரு முறையாவது வண்ணானிடம் கொடுத்து சுத்தி செய்விக்கலாம். ஒருவர் கட்டிய உடையை

மற்ருெருவர் உடுத்துவது அநாகரிகம். நாம் படுத்து உறங்கும் படுக்கைகளையும் அடிக்கடி வெயிலில் உலர்த்தி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

* * *

உடல்: நம் உடையைப்போல் உடலும் சுத்தமாக இருக்கவேண்டும். தினமும் உடலை நன்ருகத் தேய்த்துக் குளிக்கவேண்டும். வாரத்துக்கு ஒரு முறையாவது தலைமயிர் சிக்கு பிடிக்காதவாறு எண்ணெய் தேய்த்து முழுக வேண்டும். கோடை காலங்களில் நம் உடலில் வியர்வை அதிகமாதலால் காலையிலும், மாலையிலும் இரண்டு தடவைகள் குளிப்பது நல்லது.

நாம் ஆரோக்கியமாயிருக்க வெளிப்புற சுத்தத்தைப் போலவே நம் உடலின் உட்புற சுத்தமும் அவசியம். உட்புறம் சுத்தமாயிருப்பதற்கு நாம் உட்கொள்ளும் உணவு சுத்தமாயிருக்கவேண்டும். அந்த உணவு நன்ருக சமைக்கப்பட்டதாயும், உடலுக்கு வலிமை ஊட்டுவதாயும் இருக்கவேண்டும். வேளை தவறி சாப்பிடுவதாலும், அழுகிய பழங்களையும் கெட்ட பண்டங்களையும் சாப்பிடுவதாலும் உடலுக்கு நோய் வருகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாதலால் நோயில்லாமல் வாழ்வதற்கு வேண்டியவைகளை நாம் நம்முடைய

முயற்சியால் செய்துகொள்ள வேண்டும். மனக் கவலையும் சில சமயங்களில் உடல் நோய்க்குக் காரணமாதலால் கூடியவரையில் கவலையை ஒழித்து உள்ளத்தில் உற்சாகத்தோடு இருக்க வேண்டும். பிறருக்கு உண்மையான உதவி செய்யும்போது உள்ளத்தில் உற்சாகம் ஏற்படும்.

* * *

ஊர்: ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு கிணறு வேண்டும். குடி தண்ணீருக்கு உப யோகிக்கும் கிணற்றில் இறங்கி யாரும் குளிக்கக் கூடாது. துணி துவைக்கக்கூடாது. அழுக்குப் பாத்திரங்களைக் கழுவக்கூடாது. நகரங்களில் குழாய் மூலமாகத் தண்ணீர் வருகிறது.

ஆற்றுக்கும், குளத்துக்கும் பக்கத்தில் மல சலம் கழிப்பது அசுத்தம். அழுக்கடைந்த தண்ணீரைக் குடிப்பதால் பல வியாதிகள் உண்டாகும். முக்கியமாக நரம்புச் சிலந்தி, காலரா, சீதபேதி முதலிய வியாதிகளுக்கு இடம் கொடுப்போம். தெருக்களிலும், நடைபாதை களிலும் மலசலம் கழிப்பது கூடாது. மறைவாக இதற்காக ஏற்பட்ட இடங்களில் கழிக்க வேண்டும். அவ்விடங்களிலிருந்து துர்நாற்றம் வீசாதபடி இவற்றை அப்புறப்படுத்தவேண்டும். குழந்தைகளையும் இவ்வாறு பழக்கவேண்டும். வீட்டிலுள்ள சாக்கடைத் தண்ணீரைத் தேங்க விடக் கூடாது. உடனே வெளியேற்றி செடி கொடிகளுக்கு உபயோகித்துவிட வேண்டும்.

# விவசாயம்

எல்லாத் தொழிலுக்கும் ஆதாரமான தொழில் பயிர்த்தொழில். நம் நாடு விவசாய நாடு. பர்மா நீங்கிய நம் இந்தியாவில் சுமார் 6,50,000 ரெவின்யு கிராமங்கள் இருக்கின்றன. கிராமவாசிகள் எல்லோரும் சாதாரணமாக விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளார்கள். தஞ்சை, திருச்சிராப்பள்ளி போன்ற செழிப்பான ஜில்லாக்களில் விவசாயம் அதிகமாதலால் அங்குள்ள கிராமங்களில் மக்கள் நெருக்கமாக வசிக்கிருர்கள்.

விவசாயிகள் நன்ருகப் பாடுபட்டால் விளைச்சல் அதிகமாகும். விளைச்சல் அதிகமானுல் நாடு செழிப்படைந்து நாட்டில் பஞ்சம் நீங்கும். விளைச்சல் அதிகமாவதற்கு வயலில் நல்ல உரம் போடவேண்டும். பயிர்களுக்குப் பூச்சி வராதவாறு நன்ருகப் பாதுகாக்க வேண்டும். பச்சைத் தழைகள், சாணம், குப்பைகள் முதலியவை நல்ல உரங்களாகும். நம் நாட்டின் முன்னேற்றம் விவசாயிகள் கையில் தானிருக்கிறது. “உழைப்பவனுக்கு நிலம் சொந்தம்” என்று காந்தியடிகள் கூறினுர்கள்.

---

# கைத்தொழில்

விவசாயத்துக்கு அடுத்தது கைத்தொழிலாகும். தொழிலாளிகள் உதவியில்லாமல் ஒரு வேலையும் நடக்காது. தொழிலாளர்களுக்குத் தொழிலுக்குத் தக்கபடி தாராளமாகக் கூலி கொடுக்கவேண்டும். தொழிலாளியும் உண்மையாக உழைக்கவேண்டும். அநேகமாக விவசாயிகளைப்போல் தொழிலாளிகளும் கிராமங்களிலேயே நம் நாட்டில் வசிக்கிறார்கள்.

சாகுபடி இல்லாத காலங்களில் வீணாக நேரத்தைக் கழிக்காமல் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கைத்தொழிலைச் செய்யலாம். நூல் நூற்கலாம். இதைப் பெண்களும் மேற்கொள்ளலாம். கூடை பாய் முதலியவை பின்னுதல் போன்ற வேலைகளைச் செய்யலாம். நம் நாட்டுத் தொழிலாளர்களால் ஆக்கப்பட்ட பொருளை நாம் எல்லோரும் ஆதரிப்பது நமது கடமையாகும்.

# அளவுகள்

பன்னிரண்டு அங்குலம் கொண்டது ஒரு அடியாகும். மூன்று அடிகொண்டது ஒரு கஜம். இரண்டு சாண் ஒரு முழம். இரண்டு முழம் ஒரு கஜம். ஒரு சாணுக்கு ஒன்பது அங்குலம். வீடு முதலியவைகளின் நீள அகலங்களை இந்த அளவுகளின் மூலம் அளக்கலாம். ஒரு இடத்தின் விஸ்தீரணத்தைத் தெரிந்து கொள்ள அந்த இடத்தின் நீளத்தையும், அகலத்தையும் அளந்து பெருக்கவேண்டும். அதாவது ஒரு இடத்தின் நீளம் 4 அடி, அகலம் 2 அடி என்றால் அதன் பரப்பளவு $4\times2=8$ சதுர அடியாகும். இந்த அளவுகளே துணிகளை அளக்கவும் உபயோகப்படுகின்றன. இதற்கு நீட்டலளவை என்று பெயர்.

4480 சதுர கஜம் கொண்டது ஒரு ஏகரா. கன அளவு என்பது கிணறு அல்லது குழி வெட்டும் கணக்கு. 2 அடி நீளம், 2 அடி அகலம் உள்ள நிலத்தை 2 அடி ஆழம் வெட்டினால், வெட்டி எடுத்த மண்ணின் கன பரிமாணம் நீளம் $\times$ அகலம் $\times$ உயரம் மூன்றையும் பெருக்கி வரும் மொத்த கன அடிகளாகும். அதாவது $2\times2\times2=8$ கன அடிகளாகும்.

| | | |
|---|---|---|
| ஒரு ரூபாய் எடை | = | 1 தோலா |
| மூன்று தோலா | = | 1 பலம் |
| எட்டு பலம் | = | 1 சேர் |
| ஐந்து சேர் | = | 1 வீசை |
| எட்டு வீசை | = | 1 மணங்கு |
| இருபது மணங்கு | = | 1 பாரம் |

பவுண்டு என்பது ஆங்கில அளவு. $3\frac{1}{8}$ பவுண்டுகள் நம் நாட்டில் ஒரு வீசைக்கு சமமாகும். நிறுக்க வேண்டிய பொருள்களை இந்த அளவுகளின் மூலம் நிறுக்கிறார்கள். இவைகளுக்கு நிறுத்தலளவை என்று பெயர்.

| | | |
|---|---|---|
| எட்டு ஆழாக்கு | = | 1 படி |
| எட்டு படி | = | 1 மரக்கால் |
| பன்னிரண்டு மரக்கால் | = | 1 கலம் |

நெல் முதலிய தானியங்களையும், இதைப் போன்ற மற்றவைகளையும் இவைகளால் அளக்கிறோம். இந்த அளவுக்கு முகத்தலளவை என்று பெயர்.

| | |
|---|---|
| 60 வினாடிகள் கொண்டது | 1 நிமிஷம் |
| 60 நிமிஷம் கொண்டது | 1 மணி |
| இரவு | 12 மணி |
| பகல் | 12 மணி |
| ஆக ஒரு நாளில் மொத்தம் | 24 மணி |

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்தில் | = | 365 நாட்கள் |
| ஏழு நாட்கள் | = | 1 வாரம் |
| இரண்டு வாரங்கள் | = | 1 பட்சம் |
| 30 நாட்கள் | = | 1 மாதம் |
| 12 மாதங்கள் | = | 1 வருடம் |

லீப் வருடங்களுக்கு 366 நாட்கள்

லீப் வருடத்தில் பிப்ரவரி மாதத்துக்கு 29 நாட்கள்.

லீப் வருடம் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்படும்.

---

# இந்தியா

நாம் வசிக்கும் நாட்டிற்கு இந்தியா என்று பெயர். நம் நாடு உலகத்தில் சைனு, ரஷியா முதலிய நாடுகளைப்போல் ஓர் பெரிய நாடு. இதன் மக்களின் எண்ணிக்கை (ஜனத் தொகை) இன்று 40 கோடிக்குமேல் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இது உலகத்தின் மக்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பாகமாகும். அதே மாதிரியாக நம் நாட்டின் நிலப் பரப்பு சுமார் இரண்டு லட்சம் சதுர மைல். இது ஐரோப்பா கண்டத்திலுள்ள ரஷியாவைத் தவிர எல்லா நாடுகளையும் ஒன்று சேர்த்த பரப்பளவுக்கு சமமாகும்.

உலகத்தில் ஆறில் ஒரு பாகத்தார் நம் நாட்டின் கிராமத்தில் வசிக்கிறார்கள். வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளின் மொத்த மக்களின் எண்ணிக்கையே நம் நாட்டின் கிராமவாசிகள் ஆவார்கள். அதாவது நம் நாட்டில் 100-க்கு 85 பேர்களுக்குமேல் கிராமவாசிகள். நமது ஊர் ஒரு சிறிய கிராமமாயிருந்தாலும் இந்தியாவில்தான் இருக்கிறது. நமக்கு இந்தியர்கள் என்று பெயர்.

நம் இந்தியா ஒரு தீபகற்பம். மூன்று பக்கம் தண்ணீரால் சூழப்பட்டு ஒரு பாகம் பூமியோடு சேர்ந்திருக்கும் நில பாகத்துக்கு தீப கற்பம் என்று பெயர். இதன் வட எல்லை இமயமலைத் தொடர். இது உலகத்திலுள்ள எல்லா மலைகளைக் காட்டிலும் உயர்ந்த மலை. இதன் உச்சிகு 'எவரெஸ்ட்' என்று பெயர். கங்கை, யமுனை, பிரமபுத்திரா முதலிய நதிகள் இதில் உற்பத்தியாகி வட இந்தியாவில் ஓடு கின்றன. இவைகள் பாயும் இடங்கள் செழிப் புள்ளதாகையால் மக்கள் நெருக்கமுள்ள பல பெரிய நகரங்களும், கிராமங்களும் இருக் கின்றன.

இந்தியாவின் தெற்கில் இந்துமகா சமுத் திரமும், கிழக்கில் வங்காளக் குடாக்கடலும், மேற்கே அரபிக் கடலுமாக மூன்று பாகமும் கடலால் சூழபபட்டிருக்கிறது. கல்கத்தா, சென்னை, பம்பாய், கராச்சி என்று பெரிய துறைமுகங்களும், பல சிறு துறைமுகங்களும் இருக்கின்றன. தமிழ் நாட்டில் தூத்துக்குடி, நாகப்பட்டிணம், புதுச்சேரி முதலியவை சிறிய முக்கிய துறைமுகப்பட்டிணங்கள். இவைகளில் சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற 150 வருட காலங்களாக இந்தியா முழுவதையும் ஆங்கிலேயர்கள் சுமார் 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள இங்கிலாந்து என்ற சிறிய நாட்டிலிருந்து ஆண்டு வந்தார்கள். அந்த நாடு நம் நாட்டில் இருபதில் ஒரு பங்கு தானிருக்கும். நம்மையும், நம்முடைய செல்வங்களையும் தாராளமாக உபயோகித்து குடி அரசு என்ற மக்கள் ஆட்சியின் பெயரால் நம்மை ஆண்டு வந்தார்கள். 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி அன்று நம் இந்திய நாட்டின் ஆட்சியை நம்முடைய ஒப்பற்ற தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு விலகிக்கொண்டார்கள். இன்று நம் நாடு ஓர் சுதந்திர நாடு. நாமே நம்முடைய நாட்டை உண்மையான குடி அரசு என்ற மக்கள் ஆட்சி முறையில் சுதந்திரமாக ஆண்டு வருகிறோம்.

# இந்தியாவின் பிரிவுகள்

நம் துரதிருஷ்டவசத்தாலும், நம்மை ஆண்டு வந்த ஆங்கிலேயர்களின் ஆட்சியின் சூழ்ச்சியாலும், முஸ்லீம் லீக் தலைவராயிருந்த ஜனுப் மகமத் அலி ஜின்னுவின் விடாப் பிடி வாதத்தாலும், மகாத்மா காந்தியடிகளின் சகிப்பு, தியாகம் என்ற மனித மேன்மைத் தன்மை யாலும், காங்கிரஸ் மகா சபையின் தாராள மனப்பான்மையாலும், நம் தமிழ் நாட்டுத் தலைவர் ராஜாஜியின் சிறந்த சமயத்துக்கு ஏற்ற அரசியல் அறிவினலும் நம் தேசம் இரண் டாகப் பிரிக்கப்பட்டது. அப்படி பிரிக்கப்பட்ட பாகங்களுக்கு ஐக்கிய இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பெயர். ஐக்கிய இந்தியா பாகிஸ்தானைவிட பல மடங்கு நிலப்பரப்பிலும், மக்களின் எண்ணிக்கையிலும் பெரியது. இவை கள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சட்ட சபை கள் உண்டு. பாகிஸ்தானுக்கு ஜனுப் மகமத் அலி ஜின்னு, முதல் ராஜப் பிரதிநிதியாக இருந் தார். ஐக்கிய இந்தியாவின் முதல் ராஜப் பிரதிநிதி லார்ட் மௌண்ட்பாட்டன். பிறகு நம் தமிழ் நாட்டின் ஒப்பற்ற தலைவர் ராஜாஜி. ஆங்கில ஆட்சியில் முதல் ராஜப் பிரதிநிதி வாரன் ஹேஸ்டிங்ஸ். அன்று இந்தியா முழுவதும் ஒரே நாடாக இருந்து வந்தது.

இன்று ஐக்கிய இந்தியாவின் ராஜப் பிரதிநிதியும், பாகிஸ்தானின் ராஜப் பிரதி நிதியும் இந்தியாவின் கடைசி ராஜப் பிரதிநிதிகளாக இருப்பார்கள். இனி குடி அரசு முறையில் ஆட்சி நடைபெறும், அப்பொழுது இவர்களுக்கு குடி அரசுத் தலைவர்கள் என்று பெயர் வழங்கப்படும். இங்கிலாந்திலிருந்து வந்த நம் நாட்டின் சக்ரவர்த்தி, தன் 'சக்ரவர்த்தி' என்ற பட்டத்தை இழந்துவிட்டார். நமக்கும் இங்கிலாந்துக்கும் குடி அரசாட்சி மூலமாக ஒப்பந்தங்கள் ஏற்படலாம்.

குடி அரசு ஆட்சியை எவ்விதம் ஏற்படுத்துவது என்ற திட்டத்தை வகுப்பதற்கு இரண்டு நாடுகளிலும் அந்தந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மாகாண சட்ட சபையிலிருந்து, அரசியல் நிர்ணய சபைகள் பாகிஸ்தானுக்கு ஒன்றும், நம் ஐக்கிய இந்திய நாட்டுக்கு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் வேலைகள் முடிவடைந்துவிட்டன. குடி அரசாட்சி முறை இந்த நாடுகளில் நிறுவப்பட்டிருக்கிறது. 21 வயது வந்த ஆண் பெண் எல்லோருக்கும் ஓட்டு உரிமை உண்டு.

நம் ஐக்கிய இந்தியாவின் பிரதம மந்திரி பண்டிட் ஜவஹர்லால் நேரு. உதவி பிரதம

மந்திரி சர்தார் வல்லபாய் படேல். பாகிஸ்தானின் பிரதம மந்திரி ஜனப் லியாகத் அலிகான். பாகிஸ்தானின் தலைநகர் கராச்சி. ஐக்கிய இந்தியாவின் தலைநகர் டில்லி நகரம்.

சிந்து பஞ்சாப், (மேற்கு பஞ்சாப்) வடமேற்கு எல்லை மாகாணம், கிழக்கு வங்காளம், பலுசிஸ்தான் முதலியவை பாகிஸ்தான் பிரதேசங்கள். இவைகளில் பெருவாரியாக மகமதியர்களே வசிக்கின்றனர்கள். இதன் மக்களின் எண்ணிக்கை 8-லிருந்து 10 கோடி என்று கணக்கிடலாம்.

சென்னை, பம்பாய், மேற்கு வங்காளம். ஒரிஸா, பீஹார், மத்தியமாகாணம், ஐக்கிய மாகாணம், அஸாம் முதலிய மாகாணங்களும் அநேகமாக எல்லா சமஸ்தானங்களும் நம் ஐக்கிய இந்தியாவில் சேர்ந்திருக்கின்றன. நிஜாமும், காஷ்மீரும் நம் ஐக்கிய இந்தியாவுடன்தான் சேர்ந்தன. ஐக்கிய இந்தியாவின் மக்களின் எண்ணிக்கை 30 கோடிக்கு மேலிருக்கலாம். ஐக்கிய இந்தியாவில் எல்லா வகுப்பினர்களும், மதத்தினர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்துக்களே பெருவாரியாக வசிக்கிறார்கள்.

ஐக்கிய இந்தியா பாகிஸ்தானைவிட பொருளாதாரம், மக்களின் எண்ணிக்கை, நிலப்பரப்பு மற்ற எல்லா வகையிலும் பல மடங்கு பெரியது.

# தமிழ் நாடு

நம் ஐக்கிய இந்திய நாட்டின் தென் பாகத்திற்குத் தமிழ் நாடு என்று பெயர். தமிழ் நாட்டின் வட எல்லை திருப்பதி மலை. தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற மற்ற மொழிகளும் ஐக்கிய இந்தியாவின் தென் பாகத்தில் பேசப் படுகின்றன. நம் தமிழ் நாட்டுக்கு வடக்கே தெலுங்கு நாடு. வட இந்தியாவில் ஹிந்துஸ் தானியும், அதைச் சார்ந்த மராத்தி, குஜராத்தி, வங்காளம் முதலிய மொழிகளும் பேசப்படு கின்றன.

தமிழ் நாடு சென்னை மாகாணத்திலிருக் கிறது. நம் தலைநகர் சென்னைப்பட்டணம். சென்னை மாகாண அரசாங்கம் நம்மை ஆளு கின்றது. மாகாண அரசாங்கத்தின் தலைமை அதிகாரிகளும், நம் மந்திரிகளும் சென்னையை தலைநகராகக் கொண்டு அரசாங்கத்தை நடத்தி வருகிறார்கள். செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நீலகிரி முதலியவை நம் மாகா ணத்தின் தமிழ் ஜில்லாக்கள். திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் நாகர் கோவில், குமரிமுனை

முதலிய இடங்களும் தமிழ் மக்கள் வாழும் இடங்களே. தமிழ் நாட்டின் தென்கோடி எல்லை குமரிமுனையாகும். தெலுங்கு, மலையாளம் கன்னடம் பேசும் ஜில்லாக்களும் சென்னை மாகாணத்தில்தான் இருக்கின்றன. தமிழர்கள் தாங்களே தங்கள் மொழியில் அரசியல் நடத்த நமது ஐக்கிய இந்திய அரசாங்க சபை திட்டம் வகுத்து வருகின்றது. அன்றுதான் தமிழன் உண்மை குடி ஆட்சியை அடைவான்.

நம் தமிழ் நாட்டில் காவேரி, தென் பெண்ணை, வடபெண்ணை, பாலாறு, வெண்ணாறு, வெட்டாறு, வைகை, தாம்ரவருணி, குடமுருட்டி, அரசலாறு, முதலிய முக்கிய நதிகளும், பல சிறிய ஆறுகளும், கால்வாய்களும் பாய்கின்றன. காவேரி குடகு மலையில் உற்பத்தியாகி தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மாயவரத்துக்கு அருகில் கடலில் சேருகிறது. காவேரி நதி பாயும் தஞ்சை, திருச்சி ஜில்லாக்கள் மிக செழிப்புள்ளவைகள். இவ்விடங்களில் மக்கள் நெருக்கமாக வசிக்கிறார்கள்.

நம் தமிழ் நாட்டில் பல கோவில்களும், அநேக அழகான நகரங்களும், கிராமங்களும், இருக்கின்றன. சென்னைப்பட்டணம், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி, மதுரை, பழனி, ராமேஸ்வரம், தஞ்சாவூர், கும்பகோணம், காஞ்சிபுரம்,

ஸ்ரீ வில்லிபுத்தூர், கோயமுத்தூர், உதகமண்ட லம், கோடைக்கானல், திருக்குற்ருலம் போன்ற பல முக்கிய நகரங்கள் உண்டு. கோயமுத்தூர் ஜில்லாவிலும், மதுரையிலும், 100 பஞ்சாலை களுக்குமேல் இருக்கின்றன.

நம் தமிழ் நாட்டு நாகரீகம் மிகப் பழமை யானது. பழைய காலத்தில் நம் தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டியன் என்ற மூன்று மன்னர் கள் அரசாண்டு வந்தார்கள்.

திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்கள், மலையாளம், நீலகிரி ஜில்லாக்கள், கோயமுத்தூர் மைசூர் ஆகிய இரண்டிலும் சில பாகங்கள் சேர்ந்து சேர நாடாகும்.

சென்னை நகரத்திற்குத் தெற்கே திருச்சிராப் பள்ளி வரையில் உள்ள ஜில்லாக்கள் சோழ நாட் டுக்கு அடங்கியிருந்தன. மற்ற தமிழ் ஜில்லாக் கள் பாண்டிய நாட்டுக்குச் சொந்தமாயிருந்தன. இந்த மூன்று பெரிய அரசர்களைத் தவிர சில சிறிய அரசர்களும் மலையோரங்களில் ஆட்சி செய்துவந்தார்கள்.

சேர அரசர்களுக்கு வஞ்சி, கருவூர், திரு வஞ்சைக்களம் முதலியன தலைநகர்களாக இருந்தன. பிற்காலத்தில் இம்மன்னர்கள் தமிழ் மொழியை விட்டு மலையாளத்தை தாய் மொழி யாகக் கொண்டார்கள். இம்மொழி பேசும்

திருவாங்கூர் அரசர் சேர வழியைச் சேர்ந்தவர். சோழ நாட்டு அரசர்கள் திருச்சிராப்பள்ளியி லுள்ள உறையூரையும், காவிரிப்பூம்பட்டணத் தையும் தலைநகராகக் கொண்டார்கள். பாண்டிய நாட்டுத் தலைநகர் மதுரை.

இவர்களுக்குப் பிறகு தெலுங்கு தேசத்தி லுள்ள விஜய நகரத்திலிருந்து பல்லவரசர்கள் தேச பக்தியும் தெய்வ பக்தியும் கொண்டு நியாயமாக நம் நாட்டை ஆட்சி புரிந்து வந்தார்கள். பிறகு பல சிறிய அரசர்கள் மதுரை முதலிய இடங்களில் அரசாங்கம் நடத்தி வந்தார்கள். அதன் பிறகு மகமதியர்கள் நம் தமிழ் நாட்டை அரசாண்டார்கள். ஐரோப்பாவி லிருந்து வந்த வியாபாரிகளாகிய ஆங்கிலேயர் களும், பிரஞ்சுக்காரர்களும், உள்நாட்டு அரசர் களுக்குள் சண்டை சச்சரவுகளை உண்டாக்கி அவர்களின் கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் உதவியால் ஆங்கில ஆட்சியை நிலை நாட்டினார் கள். அன்றிலிருந்து நேற்றுவரை நம்மை அடக்கி அடிமைகளாக்கி வைத்திருந்தார்கள். நம் நாடு இன்று சுதந்திர நாடு. இனி நாமே நமது நாட்டை சமாதானமாக மற்றவர்களிடம் ஏமாறுமல் ஆளவேண்டும். இதற்கு முக்கியம் எழுத்தறிவு.

---

CC. P. W. Ltd., Madras—1000-4-'55.

# தென்னிந்திய
# முதியோர் கல்வி கூட்டுறவு கழகப் பதிப்பகம், லிமிடெட்,
## சென்னை-2.

- மககளுககாக, மக்களால் ஆக்கப்பட்ட முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை ஏழை மக்கள் அடையக் கூடிய எளிய விலையில் வெளியிட, நம் மாகாணத்தின் ஒரே ஒரு கூட்டுறவு பதிப்பகம்.

- அரசாங்கத்தின் முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை வெளியிடும் பதிப்பகம்.

- பாலர், முதியோர் கல்விப் பிரசுரங்கள், உபகரணங்கள் தயார் செய்து பதிப்பிக்கும் பதிப்பகம்.

- மக்கள் ஆதரவே எங்கள்
  உழைப்புக்குச் செழிப்பும்,
  வெற்றியும்

- முன் பணம் கட்டக்கூடிய, ஜில்லா, தாலூக்கா, பிர்கா விற்பனையாளர்கள் தேவை. தயவு செய்து விபரங்களுக்கு எழுதவும்.

ஜி. ஹரிசர்வோத்தம ராவ்,
தலைவர்

டி. ஜே. ஆர். கோபால்,
காரியதரிசி.

தலைமை காரியாலயம்:

10, நரஸிங்கபுரம் தெருவு, சென்னை-2

டெலிபோன்: 85397.